# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,

# நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த)ச்

# சட்டம்

---

[1982, சனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1982, சனவரி மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 1.20 தபாற் செலவு : சதம் 75

## 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,
## நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த)ச் சட்டம்

[1982, சனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது].

ச.வ.—ஓ 31/81 / 1462

**1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (உ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

" (உ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறுன ஏதேனும் அபிவிருத்திக் கருத்திட்டத்தை அல்லது செயற்றிட்டத்தைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக அவசியமாகக்கூடியவாறுன அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது இலங்கையில் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள எவரேனும் ஆளுடன் கூட்டாகவாயினுஞ்சரி செய்துகொள்ளுதல், புரிதல் அத்துடன் கொண்டுநடாத்துதல் ;" ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஞ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

" (ஞ) அத்தகைய இடப்பரப்புகளில், ஏதேனும் அரசாங்க முகவர்நிலையத்தின் அல்லது வேறெவரேனும் ஆளின், ஏதேனும் அபிவிருத்திக் கருத்திட்டத்தை அல்லது செயற்றிட்டத்தை அங்கீகரித்தல், ஒன்றிணைத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் அல்லது தடைசெய்தல் ;".

முதன்மைச்சட்டவாக்கத்தில் IIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்தல்.

3. முதன்மைச்சட்டவாக்கத்தின் பாகம் II ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பாகம் IIஅ எனப் பயனுறுதலும் வேண்டும் :—

### ' பாகம் II அ

### திட்டமிடல் நடவடிக்கைமுறை

அபிவிருத்தித் திட்டம் முதலியவற்றைத் தயாரித்தல்.

8அ. (1) அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பு ஒன்றில் அல்லது அதன் பாகத்தில் உள்ள காணிகளினதும் கட்டிடங்களினதும் பூரணப்படுத்தப்பட்ட திட்டமிடுதலையும், பௌதிக

அபிவிருத்தியையும் மேம்படுத்தும் கருத்துடனும் ஒழுங்குபடுத்தும் கருத்துடனும், அதிகாரசபையானது, அச்சமூகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய வாழ்வசதிகளையும் சேவைகளையும் கருத்திற் கொண்டு, அபிவிருத்தி செய்வதற்கான அத்தகைய இடப்பரப்பிற்கான அல்லது அதன் பாகத்திற்கான அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும்

(2) ஓராம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஓர் அபிவிருத்தித்திட்டம், இச்சட்டத்திற்கான அட்டவணையில் ஏற்பாடுசெய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது அவற்றுள் எது தொடர்பாகவும் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கலாம்.

திட்டமிடற்குழுவை நியமித்தல்.

8ஆ. (1) ஓர் அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், வலுவுக்கிடல் என்பனவற்றைச் சார்ந்த எல்லாக் கருமங்கள்மீதும் அதிகாரசபைக்கு ஆலோசனைகூறும் நோக்கங்களுக்காக, 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி, குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். இது இதனகத்துப் பின்னர், " திட்டமிடற் குழு " எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) திட்டமிடற் குழுவினால் அலுவல்கள் கொண்டுநடாத்தப்படுவதற்காக விதிகள் ஆக்கப்படலாம்.

அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அவசியமான தகவல் முதலியவற்றைக் கோருவதற்கு அதிகாரசபைக்குள்ள தத்துவம்.

8இ. (1) அதிகாரசபையானது, அபிவிருத்தித் திட்டமொன்றைக் தயாரிப்பதற்காக, அபிவிருத்தி செய்வதற்கான எந்த இடப்பரப்புக்காக அல்லது அதன் பாகத்திற்காக, அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதோ அபிவிருத்தி செய்வதற்கான அந்த இடப்பரப்பு அல்லது அதன்பாகம் எந்த உள்ளூரதிகாரசபையின் அல்லது உள்ளூரதிகாரசபைகளின் நிருவாக எல்லைகளுக்குள்ளாக அமைந்துள்ளதோ அந்த உள்ளூரதிகார சபையை அல்லது உள்ளூரதிகாரசபைகளை அல்லது அத்தகைய இடப்பரப்பிலுள்ள எவரேனும் ஆளை, எழுத்திலான அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதில்,—

(அ) அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறானதும், அதிகாரசபையின் அபிப்பிராயப்படி அவசியமானதெனக் கருதப்படுவதுமான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறும்; அத்துடன்

(ஆ) உள்ளூரதிகாரசபையினால் அல்லது உள்ளூரதிகாரசபைகளினால், அல்லது ஆளினால் பயனுள்ளனவெனக் கருதப் படக்கூடியவாறான விதப்புரைகள் எவையேனுமிருப்பின், அத்தகைய விதப்புரைகளைச் செய்யுமாறும்,

அத்தகைய அறிவித்தல்மூலம் தேவைப்படுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் ஒன்றின்மூலம் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஓர் உள்ளூரதிகாரசபை அல்லது எவரேனும் ஆள், ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதனின்று விலக்கப்பட்டாலன்றி, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல், அத்தகைய உள்ளூரதிகாரசபையின் அல்லது ஆளின் கடமையாதல் வேண்டும்.

வரைவு அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல்.

8ஈ. வரைவு அபிவிருத்தித்திட்டம் ஒன்றைத் தயாரித்ததன்மேல், அதிகாரசபையானது, அபிவிருத்தி செய்வதற்கான எந்த இடப்பரப்புக்காக அல்லது அதன் பாகத்திற்காக, அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டதோ, அபிவிருத்தி செய்வதற்கான அந்த இடப்பரப்பு அல்லது அதன் பாகம் எந்த உள்ளூரதிகாரசபையின் அல்லது சபைகளின் நிருவாக எல்லைக்குள்ளாக அமைந்துள்ளதோ அந்த உள்ளூரதிகாரசபைக்கு அல்லது சபைகளுக்கு அதன், அல்லது அவற்றின் கருத்துரைகளுக்காக அத்தகைய திட்டத்தின் பிரதியொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்; அத்துடன், அத்தகைய வரைவுத்திட்டத்தைப் பெற்றுக்கொண்ட அறுபது நாட்களுக்குள்ளாக அதன்மீதான அதன் கருத்துக்கள் அல்லது அவற்றின் கருத்துக்கள், ஏதேனுமிருப்பின் அவைபற்றி அதிகாரசபைக்குத் தெரிவித்துக் கொள்ளுதல் உள்ளூரதிகாரசபையின் அல்லது சபைகளின் கடமையாதல் வேண்டும்.

வரைவு அபிவிருத்தித் திட்டம், திட்டமிடற் குழுவினால் பரிசோதிக்கப்பட்டு அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8உ. (1) எட்டு ஈ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறுபது நாட்காலப்பகுதி முடிவுற்றதன்மேல், அப்பிரிவின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அதன்மீதான கருத்துரைகள், எவையேனும் இருப்பின், அவற்றுடன் சேர்ந்து அவ் வரைவு அபிவிருத்தித்திட்டம், திட்டமிடற்குழுவினால் பரிசோதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன், திட்டமிடற் குழுவானது அத்தகைய பரி

சோதனையின் பின்னர் செயற்படக்கூடியளவு விரைவாக, அத்தகைய அபிவிருத்தித் திட்டத்தின்மீதான அதன் விதப்புரைகளையும் சேர்த்து, அதனை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வரைவு அபிவிருத்தித் திட்டத்தை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்ததன்மேல், அதிகாரசபையானது, அத்தகைய அபிவிருத்தித்திட்டத்தை, அதன்மீதான விதப்புரைகளுடன் சேர்த்து அதனை அங்கீகரிப்பதற்காக அல்லது திரிபுபடுத்துவதற்காக அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

அபிவிருத்தித் திட்டத்தை அங்கீகரித்தல்.

8ஊ. அமைச்சரானவர், 8உ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வரைவு அபிவிருத்தித் திட்டம் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டதன்மேல் திட்டம் தொடர்பில் அதிகாரசபையாற் செய்யப்பட்ட விதப்புரைகளைப் பரிசீலனை செய்ததன்பின் அமைச்சர், அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய மாற்றங்கள் அல்லது திரிபுகள் எவை யேனுமிருப்பின், அவற்றிற்கு அமைவாக, அபிவிருத்தித்திட்டத்தை அங்கீகரிக்கலாம்.

அபிவிருத்தித் திட்டம் முதலியன அங்கீகரிக்கப் பட்டமை பற்றிய அறிவித்தல்.

8எ. வரைவு அபிவிருத்தித்திட்டம் எதுவும் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அங்கீகாரத்தின் பின்னர் கூடியளவு விரைவாக—

(அ) அபிவிருத்தித்திட்டமானது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும் கசெற்றில் அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியன்று அது நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும் பயன்படுவதான அறிவித்தலொன்றை கசெற்றிலும், அபிவிருத்தி செய்வதற்கான எந்த இடப்பரப்பை அல்லது அதன் பாகத்தை அந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்புறுத்துகிறதோ, அபிவிருத்தி செய்வதற்கான அந்த இடப் பரப்பில் அல்லது அதன் பாகத்தில் விற்பனையாகும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளிலான தினசரிச்செய்தித் தாள்களிலும் வெளியிடச்செய்தலும் ;

(ஆ) அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிகளை அதற்கான எழுத்திலான கூற்று, வரைபடங்கள், உருவரைகள், இணைப்புக்கள் என்பனவற்றுடன் சேர்த்து, பொதுமக்கள் பார்வையிடுவதற்காக

கொழும்பிலுள்ள அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திலும், அதிகாரசபையின் அத்தகைய அலுவலகங்களிலும், அபிவிருத்தி செய்வதற்கான எந்த இடப்பரப்பை, அல்லது பாகத்தை, அந்த அபிவிருத்தித்திட்டம் தொடர்புறுத்துகிறதோ, அபிவிருத்தி செய்வதற்கான அந்த இடப்பரப்பில் அல்லது இடப்பரப்புக்கு அண்மையில், அல்லது அதன் பாகத்தில் அல்லது பாகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள உள்ளூரதிகாரசபையின் அல்லது உள்ளூரதிகாரசபைகளின் அலுவலகத்தில் அல்லது அலுவலகங்களில் கிடைக்கக்கூடியதாகச் செய்தலும்,

அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

அபிவிருத்தித் திட்டத்தின் திருத்தம் முதலியன.

8எ. (1) அதிகாரசபையானது, அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பொன்றில் அல்லது அதன்பாகத்தில் அபிவிருத்தித்திட்டம் ஒன்று நடைமுறைக்கு வந்ததன் பின்னர் எந்நேரத்திலும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் அபிவிருத்தித்திட்டத்தில் காட்டப்பட்ட வாழ்வசதிகளையும் சேவைகளையும் கருத்திற்கொண்டு, அத்தகைய திருத்தம், மாற்றீடு, மீள்நோக்கு அல்லது திரிபு அவசியமாகுமிடத்து அல்லது உசிதமாகுமிடத்து அபிவிருத்தி செய்வதற்கான அந்த இடப்பரப்பின் அல்லது அதன் பாகத்தின் ஏதேனும் குறிப்பான பாகத்துடன் அல்லது பாகங்களுடன் அது தொடர்புறும் அந்த அளவுக்கு அபிவிருத்தித் திட்டத்தைத் திருத்தலாம், மாற்றீடு செய்யலாம், மீள்நோக்கலாம் அல்லது திரிபுபடுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்திற் செய்யப்பட்ட திருத்தம் மாற்றீடு, மீள்நோக்கு அல்லது திரிபு தொடர்பாக, 8இ, 8ஈ, 8உ, 8ஊ, 8எ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்புகளில், அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்து வதற்கான அல்லது அவற்றில் ஈடுபடுவதற்கான அனுமதிப் பத்திரங்கள்.

8ஓ. (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அரசாங்க முகவர் நிலையம் ஒன்று உட்பட, ஆள் எவரும் அதிகாரசபையினால் அதன் சார்பில் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்தினது அதிகாரத்தின் கீழும் அதன் நியதிநிபந்தனைகளுக்கிணங்கவும் தவிர, அபிருத்தி செய்வதற்கான ஏதேனும் இடப்பரப்பில் அல்லது அதன் பாகத்தில் ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துதல் அல்லது அதில் ஈடுபடுதல் ஆகாது.

(2) அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பொன்றிற்குள்ளாக அல்லது அதன் பாகத்திற்குள்ளாக ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துவதற்காய அல்லது அதில் ஈடுபடுவதற்காய அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பமொன்று, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விபரங்கள் அடங்கியதாகவும் அத்தகைய கட்டணங்களுடன் சேர்த்து அனுப்பப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(3) (அ) அபிவிருத்தித் திட்டம் அங்கீகாரத்துக்கென அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அல்லது அபிவிருத்தித் திட்டம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லது ஈடுபட உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டமானது, அத்தகைய அபிவிருத்தித் திட்டத்திலுள்ள ஏதேனும் முன்மொழிவுடன் அல்லது ஏற்பாட்டுடன் இசைவில்லாததாகவிராதென அல்லது, அவற்றினை மீறுகின்றதாக இராதென ; அத்துடன்

(ஆ) அபிவிருத்தித்திட்டம் எதுவும் தயாரிக்கப்படாத ஏதேனும் விடயத்தில், எந்த நோக்கத்திற்காக, அத்தகைய அபிவிருத்திச் செயற்பாட்டினைக் கொண்டுநடாத்துவதற்கு அல்லது அதில் ஈடுபடுவதற்கு அத்தகைய அனுமதிப்பத்திரம் தேவைப்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் அத்தகைய இடப்பரப்பின் வருங்கால அபிவிருத்தியுடன் இயைந்தொழுகுவதாக இருக்கின்றதென,

அதிகாரசபை திருப்திப்பட்டால், அவசியமானவையென அதிகாரசபை கருதக்கூடியவாறான அத்

தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, (1) ஆம் உட்பிரிவின்கீழான அனுமதிப்பத்திரம் ஒன்று, அந்த உட்பிரிவின்கீழ் அதிகாரசபையால் வழங்கப்படலாம்.

(4) இப்பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு அனுமதி கொடுப்பதில், அனுமதி மறுப்பதில் அதிகாரசபையானது திட்டமிடற் குழுவின் விதப்புரைகளைப் பரிசீலனைக் கெடுக்கலாம்.

(5) இப்பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதற்கு அதிகாரசபை மறுப்பதனால் இன்னலுறும் ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகட்கு அமைவாக, அத்தகைய மறுப்புக்கு எதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம் ; அத்துடன் அத்தகைய மேன்முறையீட்டின் மீது அமைச்சரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்று ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல் அதிகாரசபையானது, அனுமதிப்பத்திரத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடு தொடங்கப்பட்டிருந்தும், எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக நிறைவாக்கப்படவில்லை என அதிகாரசபை திருப்திப்பட்டால், இரண்டு ஆண்டுகளைவிஞ்சாத மேலும் ஒரு காலப்பகுதிக்கு, அல்லது காலப்பகுதிகட்கு, ஓர் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக்காலத்தை நீடிக்கலாம் :

ஆயின், மேலும், அனுமதிப்பத்திரம் ஒன்று முடிவடைதலானது அத்தகைய நோக்கத்திற்காகப் புது அனுமதிப்பத்திரத்திற்கென பின்னரான விண்ணப்பம் எதனையும் செய்வதனை தடைசெய்யமாட்டாது.

அபிவிருத்திச் செயற்பாடு, அனுமதிப் பத்திரம் முதலியவற்றுடன் இயைந்தொழுகுவதாக இருத்தல் வேண்டும்.

8ஒ. (1) அபிவிருத்திச் செயற்பாடு எதுவும் அதன்சார்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீறுகையாக அல்லது அதற்கு மாறுபாடாகக் கொண்டுநடாத்தப்படுதலோ அல்லது எதிலும் ஈடுபடுத்தப்படுதலோ ஆகாது.

(2) அபிவிருத்திச் செயற்பாட்டிற்கென வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்தினது அதிகாரத்தின்கீழ், எவரேனும் ஆளினுல், ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடு செய்துமுடிக்கப்பட்டதன் மேல், கொண்டுநடாத்தப்பட்ட அல்லது ஈடுபடுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடு, அதற்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்துக் கிசைவாகச் செய்யப்பட்டது என்ற பயன்படும் சான்றிதழொன்றிற்காக அதிகாரசபைக்கு விண்ணப்பித்து அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியது அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ், இசைவுச் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், காணி அல்லது கட்டிடமெதுவும், அதன்சார்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதலாகாது.'.

முதன்மைச்சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச்சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் உள்ள " அத்தேதிக்குப் பின்னர் அத்தகைய காணியில் சீர்திருத்தங்கள் எவையேனும் செய்யப்பட்டிருப்பின், அவற்றின் காரணமாக உறப்பட்ட நியாயமான தொகையினுல் அதிகரித்த " என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" அந்தச் சந்தைப் பெறுமதிக்கும்,

(அ) எந்தக் காணி அல்லது அதனகத்துள்ள அக்கறை தொடர்பாகக் காணிகொள்ளற் சட்டத்தின் 38ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின்கீழ் கட்டளையெதுவும் ஆக்கப்படவில்லையோ ஏதேனும் அந்தக் காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் விடயத்தில், அந்தச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் கசெற்றில் அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியன்று உள்ள அந்தக் காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் சந்தைப் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தின், அல்லது

(ஆ) எந்தக் காணி அல்லது அதனகத்துள்ள அக்கறை தொடர்பாகக் காணி கொள்ளற் சட்டத்தின் 38ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ ஏதேனும் அந்தக் காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் விடயத்தில், அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று உள்ள அந்தக் காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் சந்தைப் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தின்,

ஐம்பது நூற்றுவீதத்தால் அதிகரித்த".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " அபிவிருத்திக் கருத் திட்டத்தோடு " என்னும் சொற்களுக்குப்பதிலாக, " அபிவிருத்தித் திட்டத்தோடு அல்லது அபிவிருத்திக் கருத்திட்டத்தோடு " என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் உள்ள " அபிவிருத்தி செய்யப்படும் ஓர் இடப்பரப்பென " என்ற சொற்களுக்குப் பதிலாக, " (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமை வாக அபிவிருத்தி செய்யப்படும் ஓர் இடப்பரப்பென " என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அந்தப் பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும் :—

"(5) அதிகாரசபையானது, ஓர் உள்ளூரதிகாரசபை யின் அலுவலர் எவருக்கும், அந்த உள்ளூரதிகார சபையுடன் கலந்தாலோசித்து, 3 ஆம் பிரிவின்கீழ் அபிவிருத்திசெய்வதற்கான இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்குள்ளாக திட்டமிடல் தொடர்பான அதன் தத்துவங்களுள், கடமைகளுள், பணிகளுள் எதனையும் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர் அதிகாரசபையின் பணிப்பின்கீழும் மேற்பார்வையின் கீழும் கட்டுப்பாட் டின்கீழும் ஏதேனும் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 26 அ, 26 ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**6.** இருபத்தாறும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன; அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ, 26ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும் :—

"அதிகாரசபையினால் தத்துவங்கள் முதலியன கையளிக்கப்படுதல்.

26அ. அதிகாரசபையானது இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களுள், பணிகளுள் அத்துடன் கடமைகளுள் எவற்றையும் அதன் தவிசாளருக்கு, அல்லது எவரேனும் அலுவல ருக்குக் கையளிக்கலாம்.

குற்றப்பணங்கள் அறவிடப்பட்டதும் அதிகாரசபையின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல்.

26ஆ. இச்சட்டத்தின்கீழ், அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ், அல்லது விதியின்கீழ் ஏதேனும் தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணங்கள் யாவும் அதிகார சபையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

" தவறுகளும் தண்டங்களும்.

28. (1) இச்சட்டத்தின் ஏற்பாடு எதனையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை, விதியை, கட்டளையை, பணிப்பை அல்லது தேவைப்பாட்டினை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளொவ்வொருவரும், இப்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட குற்றப்பணத்துடன் மேலதிகமாக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் நாள் ஒவ்வொன்றுக்கும், ஆயிரம் ரூபா குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 28 அ, 28 ஆ, 28 இ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

8. இருபத்தெட்டாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன. அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ, 28ஆ, 28இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும் :—

"அனுமதிப்பத்திரத்தின் நியதி நிபந்தனைகளுக்கு முரணாக குறித்தசில அபிவிருத்திச் செயற்பாடுகளைத் தொடங்குதல் முதலியன தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

28அ. (1) அபிவிருத்திசெய்வதற்கான இடப்பரப்பொன்றில், ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாக வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரமின்றி அல்லது அதில் எடுத்துக்காட்டப்பட்ட ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு முரணாக அத்தகைய அபிவிருத்திச் செயற்பாடு தொடங்கப்பட்டுள்ளவிடத்து, தொடர்ந்து செய்யப்பட்டவிடத்து, மீளத்தொடங்கப்பட்டவிடத்து, அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்து, அதிகாரசபையானது இச்சட்டத்தின்கீழ் அதற்குக் கிடைக்கக்கூடியதான வேறேதேனும் பரிகாரத்துடன் மேலதிகமாக, எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தலில் குறிப்பிடக்கூடியவாறான, அந்தத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குக் குறையாததான அத்தகைய நாளன்று அல்லது அதற்கு முன்னர், அத்தகைய அபிவிருத்திச் செயற்பாட்டை எந்த ஆள் நிறை

வேற்றுகின்றுரோ, அல்லது நிறைவேற்றியுள்ளாரோ, அல்லது நிறைவேற்றுவித்தாரோ அந்த ஆளை —

(அ) உடனடியாக அந்த அபிவிருத்திச் செயற்பாட்டை நிறுத்தும்படி ; அல்லது

(ஆ) எந்தக் காணியில் அத்தகைய அபிவிருத்திச் செயற்பாடு நிறைவேற்றப்படுகின்றதோ அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதோ அந்தக் காணியை அதன் மூல நிலைமைக்கு மீட்டமைக்கும்படி ; அல்லது

(இ) எந்த அனுமதிப்பத்திரத்தினது அதிகாரத்தின்கீழ் அந்த அபிவிருத்திச் செயற்பாடு கொண்டுநடாத்தப்பட்டதோ அல்லது ஈடுபடுத்தப்பட்டதோ அந்த அனுமதிப் பத்திரத்துக்கு இணங்கியொழுகுவதை, அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் ஏதேனும் நியதியுடன் அல்லது நிபந்தனையுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும்படி,

தேவைப்படுத்தலாம். அத்துடன், மேற்சொல்லப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்திற்காக—

(i) ஏதேனும் காணியை அல்லது கட்டிடத்தைப் பயன்படுத்துவதனை இடைநிறுத்தும்படி; அல்லது

(ii) ஏதேனும் கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிக்கும்படி அல்லது மாற்றும்படி,

தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆள்மீது அறிவித்தலொன்று வழங்கப்பட்டதோ அந்த ஆள், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அல்லது அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் அதிகாரசபையால் வழங்கப்படக்கூடியவாறுன அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடு எதனுடனும் இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றைப் பின்பற்றி, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அல்லது அதிகாரசபையால் வழங்கப்படக்கூடியவாறுன அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக ஏதேனும் கட்டிடம் அல்லது வேலை இடித்தழிக்கப்படாதவிடத்து அல்லது மாற்றப்

படாதவிடத்து, அக்கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிக்க அல்லது மாற்ற அதிகாரசபைக்கு அதிகாரமளிக்கும், பணிப்புறுத்தும் கட்டளையொன்றை ஆக்குமாறு அதிகாரசபை நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம் ; அத்துடன் நீதிவான் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த ஆள் கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழித்து அல்லது மாற்றி அதிகாரசபையின் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ருரோ அந்த ஆளுக்கு அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்ததன்மேல் அதே பயன்பட அவர் திருப்திப்பட்டால், அதற்கிணங்கக் கட்டளையை ஆக்கலாம்.

(ஆ) அத்தகைய ஆள் கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிக்க அல்லது மாற்றப் பொறுப்பேற்ருல் நீதிவானுனவர், தகுந்ததெனக் கருதினுல், கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு அந்த ஆளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்திற்காக, அவர் போதுமானதெனக் கருதக்கூடிய வாருன இரண்டு மாதங்களை விஞ்சாத அத்தகைய காலத்துக்குக் கட்டளையின் செயற்பாட்டைப் பிற்போடலாம்.

(4) மூன்ரும் உட்பிரிவின்கீழ் பணிப்புறுத்தும் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, அக்கட்டளையைக் கொண்டுநடாத்துவதிலான அவசியமான எல்லா உதவியையும் அளிப்பது பொலிசு அதிகாரிகளின் கடமையாதல் வேண்டும்.

(5) மூன்ரும் உட்பிரிவின்கீழ் நீதிவானுல் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றி ஏதேனும் கட்டிடத்தை அல்லது வேலையை இடித்தழிப்பதில் அல்லது மாற்றுவதில் அதிகாரசபையால் உறப்பட்ட நியாயமான செலவுகள் எவற்றையும் அறவிடுவதற்கு அதிகாரசபை உரித்துடையதாதல் வேண்டும்.

குறித்தசில விடயங்களில் காணிகளை உரித்தாக்கல்.

28ஆ. (1) ஆளொருவர்—

(அ) 8ஒ (1) என்னும் பிரிவின் ஏற்பாடு எதனையும் மீறியமைக்காக 28 ஆம் பிரிவின் கீழ் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில் ; அத்துடன்

(ஆ) 28 அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று வழங்கப்பட்டு, அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடு எதுவும் இணங்கியொழுகப்படாதுள்ள ஏதேனும் விடயத்தில்,

அமைச்சரானவர், அதற்கென அதிகாரசபையாற் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும், தற்போதைய நிலையிலுள்ள காணி அல்லது கட்டிடம் அதிகாரசபையினால் ஏதேனும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படக்கூடும் எனத் திருப்திப்பட்டதன்மீதும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டியதான அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய காணியை அதிகாரசபைக்கு உரித்தாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் காணி அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன்—

(அ) அத்தகைய காணியின் மீது ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக 8 ஒ என்னும் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் எதுவும் பெறப்படாதுள்ளவிடத்தும், அத்தகைய ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாக ஆளெவரும் நட்டஈடு எதற்கும் உரித்துடையவராதலாகாது ;

(ஆ) அத்தகைய காணியின் மீது ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டுக்காக 8 ஒ என்னும் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று பெறப்பட்டுள்ளவிடத்தும், அவ்வனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்ட நியதி, நிபந்தனைகளுக்கிணங்க கொண்டுநடாத்தப்பட்ட வேலையின் அளவுக்குத் தவிர, அத்தகைய அபிவிருத்திச் செயற்பாட்டுக்காக ஏதேனும் நட்டஈடு பெற ஆள் எவரும் உரித்துடையராகார்.

**ஆட்கள் குழு முதலியவற்றால் புரியப்படும் தவறுகள்.**

28 இ. இச்சட்டத்தின் கீழான தவறொன்று—

(அ) ஆட்கள் குழுவினால் புரியப்பட்டுள்ளவிடத்து—

(i) அந்தக் குழு (பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை தவிர்ந்த) ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயின்

தவறு புரியப்பட்ட நேரத்தில் எந்த ஆள் அக்குழுவின் ஒரு பணிப்பாளராக அல்லது செயலாளராக, அல்லது அக்குழுவின் அவரையொத்த எவரேனும் அலுவலராக உள்ளாரோ அந்த ஆளொவ்வொருவரும்; அல்லது

(ii) அக்குழு பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றுயின், அதன் தவிசாளர், அல்லது தவிசாளர் இல்லாதவிடத்து, அதன் பிரதான நிறைவேற்று அலுவலர்; அல்லது

(iii) அக்குழு ஒருள்ளூரதிகாரசபையாயின், அபிவிருத்திச் சபையின் விடயத்தில் மாவட்டச் செயலாளர், அல்லது ஒரு மாநகரசபை அல்லது நகரசபையின் விடயத்தில் விடயத்துக்கேற்றவாறு மாநகர முதல்வர் அல்லது நகர சபைத் தலைவர் ; அல்லது

(iv) அக்குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக இல்லாவிடின், தவறு புரியப்பட்ட நேரத்தில் எந்த ஆள் அக்குழுவின் உறுப்பினராக அல்லது பங்காளராகவுள்ளாரோ அந்த ஆளொவ்வொருவரும், அல்லது அதன் பிரதான நிறைவேற்று அலுவலர் ; அல்லது

(ஆ) அரசாங்கத் திணைக்களமொன்றினுல் புரியப்பட்டுள்ளவிடத்து எந்த அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாகத் தவறு புரியப்பட்டதோ அந்த அபிவிருத்திச் செயற்பாட்டின் நிறைவேற்றுகைக்கு, அல்லது அதனை நிறைவேறச் செய்தமைக்குப் பொறுப்பாகவுள்ள அந்தத் திணைக்களத்தின் அலுவலர்,

தமது இசைவு அல்லது மறைமுக ஆதரவு இன்றியும், தமது பணிகளின் தன்மையையும், வேறெல்லாச் சந்தருப்பங்களையும் கருத்திற் கொண்டு அத்தவறைப் புரிவதைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்கவேண்டியனவான எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என்றும் எண்பித்தாலன்றி அத்தவறைப் புரிந்தமைக்கு ஆளாதல் வேண்டும். ”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

'"அபிவிருத்திச் செயற்பாடு" என்பது, ஏதேனும் காணியை கூறுகளாக்கல் அல்லது உட்பிரிவுகளாக்கல், அக்காணியில் கட்டமைப்புகளை கட்டி அமைத்தல் அல்லது மீளக் கட்டி அமைத்தல், அத்துடன் அதன்மீது வேலைகளை நிர்மாணித்தல், அக்காணிமீது, காணிக்கு மேலாக அல்லது காணிக்குக்கீழ் கட்டிட, பொறியியல் மற்றும் ஏனைய தொழிற்பாடுகளைக் கொண்டுநடாத்துதல், அத்துடன் கமத் தொழில் நோக்கங்களுக்காகவும் தோட்ட வேளாண்மை நோக்கங்களுக்காகவும் ஏதேனும் காணியைப் பயன்படுத்துதல் தவிர்ந்த எப் பயன்பாட்டுக்காகக் காணி அல்லது அதன் மீதுள்ள ஏதேனும் கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டதோ அப்பயன்பாட்டிலுள்ள ஏதேனும் மாற்றம் அத்துடன் புதிய கட்டிட வரைபடத்தைச் சமர்ப்பிப்பதனைத் தேவைப்படுத்தக் கூடிய ஏதேனும் கட்டிடத் தொழிற்பாட்டை உள்ளடக்காத வதிவிடமனையை துய்ப்பதன் இடைநேர் விளைவான ஏதேனும் நோக்கத்திற்காக வதிவிடமனையொன்றின் அருகாமைக்குள்ளாக ஏதேனும் காணியைப் பயன்படுத்துதல் என்று பொருள்படும் ;

"அரசாங்க முகவர்நிலையம்" என்பது, ஓர் அரசாங்கத் திணைக்களம், உள்ளூரதிகாரசபை, அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்று பொருள் படும்.' ;

(ஆ) "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்திலுள்ள "ஏதேனும் மாநகரசபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் அபிவிருத்திச் சபை, மாநகர சபை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) "பௌதிக ரீதியான திட்டமிடல்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

'"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது மானியக்கொடை வாயிலாக, கடன்வாயிலாக அல்லது வேறுவகையில் முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்

கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிதிகளை அல்லது மூலதனத்தைக்கொண்டு கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும். '.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு அட்டவணையைச் சேர்த்துக் கொள்ளல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கம், அதற்கான 29 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் அட்டவணையைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" அட்டவணை

**அபிவிருத்தித் திட்டத்தில் ஏற்பாடுசெய்யப்படக்கூடிய கருமங்கள்**

1. அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பில் காணியும் கட்டிடங்களும் பயன்படுத்தப்படவேண்டிய முறை;

2. வெவ்வேறு நோக்கங்களுக்காகக் காணியைக் குறித்தொதுக்கல், ஒதுக்கல் அல்லது வலயமாக்கல்;

3. வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் வலயங்கள் என்பனவாய வெவ்வேறு வலயங்களில் காணியினதும் கட்டிடங்களினதும் பயன்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், நிலப்பரப்பு விகிதம், அடர்த்தி, இடவமைதி உயரம், மாடிகளின் எண்ணிக்கை, அத்துடன் கட்டிடத்தினதும் கட்டமைப்புகளினதும் பருமன், துண்டுகள், முற்றங்கள், அத்துடன் திறந்த வெளிகள் என்பனவற்றின் பருமன், வீதிகளிலிருந்து உள்ள தூரம், கட்டிடக் கோடுகள், கட்டிடங்களையும் கட்டமைப்புகளையும் அவற்றைச் சார்ந்த காணியையும் பயன்படுத்தலும், அவற்றைப் பேணலும் என்பன தொடர்பான நிபந்தனைகளையும் மட்டுப்பாடுகளையும் விதிப்பதற்குமான ஏற்பாடு;

4. (அ) கட்டிடங்களின் வெவ்வேறு பாகங்களின் உறுதிப்பாடு, புனரமைப்பு, மேற்கட்டமைப்பு ;

(ஆ) பரப்பும் உயரமும், தளங்களின் மட்டங்கள், அறைகளுக்கான இடவசதி நியமங்கள், மாடிப்படிகளுக்கும் வெளிவழிகளுக்குமான இடமும் நியமங்களும் ;

(இ) வெளிச்சமூட்டலும், காற்றோட்டமும் ;

(ஈ) தீப் பாதுகாப்பு ;

(உ) அமைவிடத்தின் வடிகாலமைப்பும் கூரையமைப்பும் ;

(ஊ) நிர்மாணப் பொருட்களுக்கான விவரக்குறிப்புக்களும் செய்முறைக்கோவையும் ;

(எ) குழாயமைப்புக்கும் கழிவகற்றலுக்குமான நியமங்களும் பொருள்களும், மின்கம்பியிணைத்தலும், அத்துடன் பம்பிகள், உயரத்தூக்கிகள் போன்றவை நிறுவுதலும் ;

(எ) மின், தொலைபன்னி மற்றும் தந்திக்கம்பிகளிலிருந்தும் நுண்ணலை மற்றும் வேறு கம்பிகளிலிருந்தும் கட்டிடங்கள் இருக்கவேண்டிய தெளிவான தூரங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள் ;

(ஐ) பாதுகாப்பற்ற கட்டிடங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளும் கட்டிடங்களுக்கும், கட்டிடங்களின் உறுதிப்பாட்டிற்கும் பாதுகாப்பிற்கும் வாழ்வசதிக்கும் இடைநேர் விளைவான வேறு கருமங்களுக்குமான தகுதி நியமத்தை விதித்துரைக்கும் ஒழுங்குவிதிகளும்,

என்பன தொடர்பில் கட்டிடங்களுக்கான தேவைப்பாடுகள்.

5. கட்டிடக்கலை, அமிசங்கள், கட்டிடங்களின் ஏற்றம், முகப்பு என்பனவற்றின் கட்டுப்பாடும், நகர மாதிரித் திட்டவமைப்புக் குறிக்கோள்களை எய்துவதற்கான ஒழுங்குவிதிகளும்,

6. சிறு பற்றைகள், மரங்கள் என்பவற்றைப் பேணுதல், நாட்டுதல், அத்துடன் காட்சிகள், கருத்திட்டங்கள், வரலாற்று, சிற்ப அக்கறையுடையனவும் காட்சியழகுடையனவுமான இடங்களைப் பேணல் என்பவற்றை உள்ளடக்கிய இயற் காட்சியமைப்பைப் பேணுவதற்கும் ஊக்குவிப்பதற்குமான ஏற்பாடு.

7. அழுக்காக்கல், சூழல்தன்மை, விளம்பரம் என்பவற்றின் கட்டுப்பாடு,

8. மோட்டார் வண்டி நிறுத்தும் வசதிகள், எல்லாவகையான வாகனங்களுக்குமான தரிப்பிடக் குடாக்கள், பாரமேற்று குடாக்கள், சேவைக் குடாக்கள் என்பனவற்றிற்கான ஏற்பாடு,

9. (அ) பாதசாரிகளுக்கும் துவிச்சக்கரவண்டிக்காரருக்குமான சிறப்பு வசதிகளை உள்ளடக்கிய போக்குவரத்து வசதிகள், ஏற்றியிறக்கல் வசதிகள்,

(ஆ) நீர்வழங்கல், கழிவுக்காலமைப்பு, வடிகாலமைப்பு மற்றும் கழிவகற்றல் வசதிகள் ;

(இ) மின்வலு வழங்கல் ;

(ஈ) தொலைத்தொடர்புச் சாதனம்

என்பன தொடர்பானவையும் அவற்றின் இடைநேர் விளைவானவையுமான கருமங்களுக்கான ஏற்பாடுகள்.

10. அணுகு வழிகளுக்கும், வீதிகளுக்குமான ஆகக்குறைந்த நியமங்கள், பூங்காக்கள், விளையாட்டுத்திடல்கள் அத்துடன், பிறவாழ்வசதிகளுக்கான திறந்த வெளிகள் என்பவற்றின் ஒதுக்கிடங்கள் என்பன உட்பட, கட்டிட நோக்கங்களுக்காக காணியை அமைத்தெடுப்பதற்கான ஏற்பாடும், வீதிகளை நிர்மாணிப்பதற்கு அல்லது சீர்திருத்துவதற்கான காணியின் அளவைத் தேவைப்படுத்துவனவும், வாழ்வசதிகளை ஏற்பாடு செய்வனவுமான நிபந்

தனைகளை விதித்தலும் அல்லது அத்தகைய நிர்மாணத்தின் அல்லது சீர்திருத்தத்தின் செலவுதொகைக்கு உதவு தொகை அளித்தல் ;

11. நிலமீட்சிக்கான ஏற்பாடுகள் ;

12. வெற்றிடமாகவோ, கட்டிட அமைவிடங்களாக எலவே கட்டப்பட்டனவாகவோ உள்ள காணியை கட்டிட அமைவிடங்களாக அமைத்தெடுத்தல் அல்லது மீள அமைத்தெடுத்தல் ;

13. ஒழுங்கைகள், தெருக்கள், வீதிகள் அத்துடன் போக்குவரத்துகள் என்பவற்றை நிர்மாணித்தல், திருப்புதல் விசாலித்தல், மாற்றுதல், சீர்திருத்துதல் அல்லது மூடிவிடுதல்;

14. கட்டிடங்கள், பாலங்கள், அத்துடன் வேறும் கட்டமைப்புகள் என்பவற்றினை நிர்மாணித்தல், திருத்துதல் அகற்றுதல் அல்லது இடித்தழித்தல்;

15. எல்லைகளை மீள்பங்கீடு செய்தலும் ஆதனச் சொந்தக்காரர்களுக்குச் சொந்தமான துண்டுகளை மீள நிர்மாணித்தலும்;

16. சிறப்புக் கவனிப்புக்கான இடப்பரப்புகளை எல்லை குறித்தலும், அவற்றின் விபரமான திட்டமிடலும், அபிவிருத்தியும், மீளபிவிருத்தியும்;

17. எந்தக் கட்டங்களாக அபிவிருத்தித்திட்டம் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டுமோ அந்தக் கட்டங்கள்;

18. வெவ்வேறு அபிவிருத்தி வகுதிகள் தொடர்பான கட்டணங்களையும் சேவை விதிப்பனவுகளையும் அறவிடல். ”.

குறித்தசில திருத்தங்களின் கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் பயன்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தில், இந்தச் சட்டத்தின் 4 ஆந் பிரிவாலும் 5 ஆம் பிரிவிலுள்ள (ஆ), (இ) என்னும் பந்திகளாலும் செய்யப்பட்ட திருத்தங்கள் 1978 ஒற்ரோபர் 1 ஆம் தேதியன்று பயனுடையனவாக வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

சட்ட அதிகாரமின்றி உள்ளூரதிகார சபை அலுவலராற் செய்யப்பட்ட குறித்தசில செயல்கள் செல்லுபடியுடையனவாதல்.

12. இச்சட்டம் ஆரம்பமாகும் தேதிக்கு முன்னர் ஓர் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பில், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் அபிவிருத்தி செய்வதற்கான ஓர் இடப்பரப்பென வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பிற்குள்ளாக திட்டமிடல் தொடர்பாக ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கையிலும், கடமையைப் புரிகையிலும், அல்லது பணிகளை நிறைவேற்றுகையிலும் ஏதேனும் செயலைச் செய்துள்ளவிடத்து, அத்தகைய அலுவலர் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்குச் சட்டப்படி தத்துவமளிக்கப்படவில்லை என்ற நிகழ்வு காரணமாக மட்டும் அத்தகைய செயல் செல்லுபடியற்றதாக இருப்பதாகவே அல்லது செல்லுபடியற்றதாகவோ கருதப்படுதல் ஆகாது.